**லக்கல பல்லேகம பிரதேச சபையி - 2024**
**-----------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்கல பல்லேகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லக்கல பல்லேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களின் போது நிர்மாணங்கள், மேம்படுத்தல்கள், கொள்வனவு என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 230,063 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 06 நூலகங்கள், ஒரு முன்பள்ளி மற்றும் e - நெனசல ஆகியவற்றில் உள்ள 225 வகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் 480 அலகுகளின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 16 கணக்கு மீதிகளுக்குரிய மீதிகள் அட்டவணைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்கு மீதிகள் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 20,343,550 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதிக்கும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் / நன்கொடைகளில் பங்களிப்பு கணக்கு மீதிகளுக்கும் இடையே ரூபா 4,177,095 வேறுபாடு இருந்தது. | - மேற்படி - | கணக்கு மீதிகள் சரியாக இருத்தல் வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் தவறுகளை இனங்கண்டு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா. 2,241,938 ஆகிய தொங்கல் கணக்கு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதி தொடர்பாக உள்ளூராட்சிமன்ற திணைக்கள உத்தியோகத்தர்கள் மூலம் புலனாய்வு ஒன்று நடாத்தப்படு வதாக. | மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 442,732 ஆகவிருந்த 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா. 570,488 ஆகவிருந்த 02 பொறுப்பு மீதிகள் ஆகியவற்றுடன் தொடர்பான பதிவேடுகள், கோவைகள் மற்றும் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | உள்ளூராட்சி மன்ற திணைக்களம் ரூபா. 500,000 ஆன மீதி 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என்பதாகவும் ஏனைய மீதிகளுக்கான அட்டவணைகள் அல்லது கோப்புகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதாக. | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்தும் வகையில் உரிய பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் ஆகியன தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| | 24 (3) (1) ஆம் பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 67 வீதிகள் வீதி பொருட் பதிவேட்டில் பட்டியலிடப் பட்டிருந்த போதிலும், அந்தச் வீதிகள் பற்றிய தகவல்கள் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. | வீதிகளை அளவீடு செய்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள் கோவை** | | | |
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நி.பி 371 (2) (ஆ) | 2015 முதல் 2018 வரை 16 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 147,696 செயல் நிமித்த கட்டுநிதியை , மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்படவில்லை. | முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணங்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி 571(3) | 2016 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப் பகுதிக்குரிய வைப்புச் செய்யப்பட்ட காலம் முடிவடைந்த ரூபா 1,721,096 ஆன 14 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | வைப்புக்களை தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 395,342 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 871,619 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 648,500 | 729,157 | 709,742 | 300,290 | 781,500 | 585,373 | 605,048 | 280,875 |
| (ii) | வாடகை | 3,184,600 | 805,852 | 803,543 | 807,381 | 4,709,800 | 844,209 | 772,689 | 805,072 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 740,000 | 172,050 | 193,800 | - | 218,000 | 279,960 | 279,960 | 21,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,416,370 | 5,758,742 | 7,182,060 | 4,707,177 | 9,376,677 | 5,670,348 | 5,370,056 | 6,130,495 |
| | | 12,989,470 | 7,465,801 | 8,889,145 | 5,814,848 | 15,085,977 | 7,379,890 | 7,027,753 | 7,238,192 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வேறு வருமானங்கள்** | | |
| சபையினால் லக்கல பழைய வைத்தியசாலையின் விடுதிகளுக்கு வழங்கப்பட்ட நீருக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 170,514 ஆன நிலுவையொன்று 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்க வில்லை. | பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நிலுவை தொகை தொடர்பாக கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நன்மைகளை அடையத் தவறுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டு முழுவதும் மொத்தம் ரூபா 24,215,842 செலவிடப்பட்டு கிவுலேவாடிய கிராமத்திற்கு நீர் வழங்குவதற்காக ஒரு நீர் திட்டம் நிறுவப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எந்தவொரு பாவனையாளருக்கும் நீர் வழங்கல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 15 நீர் பாவனையாளர் அளவில் நீர் இணைப்பிற்கு விண்ணப்பித்துள்ளதாக. | செயற்திட்டம்தை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) பொதுமக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 06 நீர் திட்டங்களின் நீர் மாதிரி சோதனை அறிக்கைகளின ் படி, E - coli பாக்டீரியாக்கள் இருந்த போதிலும், நீர் சுத்திகரிக்கப்படாமல் விநியோகிக் கப்பட்டிருந்தது. இது தொடர்பாக, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 78 (1) தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டில் நீரை சுத்திகரிப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதால், அந்த பணிகள் விரைவாக செய்யப்படும் என்பதாகதாக. | நுகர்வோருக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையின் அலுவலர்களின் வருகை மற்றும் வெளியேறல்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்பட்ட கைரேகை இயந்திரம் பல சந்தர்ப்பங்களில் செயலிழந்திருந்த போதிலும், அதை முறையாக சரிசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கைரேகை இயந்திரத்தை உடனடியாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வருகை மற்றும் வெளியேறுகளைப் பதிவு செய்ய கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கெப் வண்டி, பழுதுபார்ப்பதற்காக அரசாங்க காராஜுக்கு 2015 ஒக்டோபர் 15 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மத்திய மாகாண இயந்திர பொறியியாளரின் அறிக்கையின் பிரகாரம் திருத்த வேலைகள் முறையாக மேற்கொள்ளப்படாததன் காரணமாக சம்பந்தப்பட்ட சேவை | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடம் தேவையான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்ப்பு வேலைகளை முறையாக மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கிய நிறுவனத்திற்கு ரூபா 1,219,666 தொகையை செலுத்த முடியாமையால் மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத் திடமிருந்து பெறப்பட்ட ரூபா. 1,343,710 ஆன நிதி பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |

**3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமான லக்கல வாரச் சந்தை வளவில் 06 கடைகள் மற்றும் லக்கல சந்தை வளவில் அமைந்துள்ள 08 இறைச்சிக் கடைகள் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாடற்ற வகையிலும் குறைபயன்பாடுடனும் காணப்பட்டன. | குறுகிய கால அடிப்படையில் அல்லது குத்தகைக்கு விடப்படுவதன் மூலம் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை செயலற்றதாகவும், குறைவாகப் பயன்படுத்தப்படாம லும் இருப்பதற்கு இடமளிக்கப்படாமல் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| - | - | |
| சபையால் பயன்படுத்துகின்ற 50 காணிப் பகுதிகள், 24 கட்டிடங்கள், என்பவற்றின் உரித்தினை பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சொத்துக்களை கையேற்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக. | சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் பொழுது 07 பதவிகளுக்கான 12 உத்தியோகத்தர் களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |